03 JUN 200
University, Sr

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

### Part II Examination in Business Administration & Commerce

### 2001 / 2002 (Repeat)

### (External Degree Programme)

### BBA / COM 302 Human Resource Management

**Answer all five (05) questions** **Time: 03 hours**

1. a. மனித வள முகாமைத்துவம் எனும் பதத்தினை வரையறுப்பதுடன், அது எவ்வகையில் தந்திரோபாய மனித வள முகாமைத்துவத்திலிருந்து வேறுபடுகின்றது எனக் கூறுக.

(08 புள்ளிகள்)

b. ஆளணி முகாமைத்துவத்திலிருந்து மனித வள முகாமைத்துவத்தை வேறுபடுத்துக?

(05 புள்ளிகள்)

c. முகாமைத்துவப் பயிற்சியாளர்களை அபிவிருத்தி செய்வதில் தொழிற்சுழற்சி (Job Rotation) ஒரு சிறந்த முறை எனக் கருதப்படுகின்றது. விளக்குக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2. a. தொழில் விபரணம் (Job Description) மற்றும் ஊழிய விபரணம் (Job Specification) எனும் பதங்களை வேறுபடுத்துக.

(06 புள்ளிகள்)

b. ஐந்து நேர்காணல் தவறுகளை (Interviewing Mistakes) உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. அவ்வாறான நேர்காணல் தவறுகளைத் தவிர்ப்பதற்கு நீர் எவ்வாறான ஆலோசனைகளை முன்வைப்பீர்?

(08 புள்ளிகள்)

c. "ஊழிய ஆட்சேர்ப்பு ஓர் ஆரம்பம் மட்டுமே. திசைமுகப்படுத்தலை (Induction) மேற்கொள்ளும்போதே பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றன". இக்கூற்றினை வியாக்கியானம் செய்க.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3. a. கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் செயற்றிறன் மதிப்பீட்டின் முக்கியத்துவத்தினை மதிப்பீடு செய்க. அதனை மிகவும் வினைத்திறன்மிக்கதாக எவ்வாறு மாற்றுவீர் என விளக்குக.

(07 புள்ளிகள்)

b. இரு செயற்றிறன் மதிப்பீட்டுக் கருவிகளின் அல்லது நுட்பங்களின் நன்மை, தீமைகளை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

c. "தொழில் பகுப்பாய்வானது (Job Analysis) என்ன செய்யப்பட வேண்டும் என்பதனை விடுத்து உண்மையில் என்ன செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதைத் தெரிவிப்பதை நோக்காகக் கொண்டது". தொழில் பகுப்பாய்வின் பயன்களை குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4. a. மனித வளத் திட்டமிடல் என்றால் என்ன என்பதனை வரையறுப்பதுடன் அதன் நோக்கங்களையும் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

b. மனித வளத் திட்டமிடலின்போது வெளிவாரி ஊழிய சந்தையை விளங்கிக் கொள்ளல் அவசியமாகும். விளக்குக.

(06 புள்ளிகள்)

c. நீங்கள் ஒரு பயிற்சித் தேவைப் பகுப்பாய்வு அலுவலராக வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு அமர்த்தப்படுகின்றீர்கள் எனக் கருதுக. நீங்கள் பயிற்சித் தேவைப் பகுப்பாய்வுக்கு என்ன வகையான படிமுறைகளை பயன்படுத்துவீர்கள் என சிறு பட்டியலைத் தயாரிக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

5. a. "தொழிலாளர் தொழில்கொள்வோர் உறவு" என்பதை வரையறுத்து அது தனிப்பட்டவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஏன் முக்கியத்துவமாகக் காணப்படுகின்றது என்பதற்கு காரணம் தருக?

(08 புள்ளிகள்)

b. குழு ஊக்குவிப்புத் திட்டத்தை விட தனியாள் ஊக்குவிப்புத் திட்டம் பயன்படுத்துவதற்கு சார்பான உங்கள் அபிப்பிராயங்களை நான்கு உதாரணங்களுடன் விளக்குக.

(07 புள்ளிகள்)

c. ஒரு நிறுவனம் ஒன்றில் கூலிக்கட்டமைப்பை (wage structure) தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)